# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024
Prosecution witness for P.W.7.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ரவிக்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2025.

A2 present. A1 and 3 produced.

முதல் விசாரணை

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து பொறியியல் கல்லூரியில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன ஆர்.கே.துரையை தெரியும். 2ம் எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. மேற்படி ஆர்.கே.துரை விபத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவருக்கும், எனக்கும் நீண்டநாள் தொடர்புண்டு. எட்டையபுரத்திலிருந்து கோவில்பட்டி செல்லும் வழியில் சிகேடி பள்ளிக்கு முன்பாக விபத்து நடந்ததாக சொன்னார்கள். அவரது பிரேதத்தை எட்டையபுரம் அரசு மருத்துவமனையில் வைத்திருந்தார்கள். போலீஸ் விசாரித்தார்கள். விசாரணையில் 2ம் எதிரி திட்டமிட்டு ஆர்.கே.துரையை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். அ.சா.3 எனக்கு தகவல் சொல்லி மேற்படி ஆர்.கே.துரையை நான் சம்பவ இடத்திற்கு போய்பார்த்தேன். ஆர்.கே.துரை உடலை ஒரு கவர் போட்டு மூடிவைத்திருந்தார்கள். 2ம் எதிரி பணம் விசயம் சம்பந்தமாக கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். எவ்வளவு பணம் சம்பந்தப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆர்.கே.துரை இறப்பதற்கு முன்பாக பணம் விசயம் சம்பந்தமாக யாரும் என்னிடம் பேசிக் கொண்டதில்லை. மேற்படி

ஆர்.கே.துரையும் என்னிடம் பணம் விசயம் சம்பந்தமாக எதுவும் சொல்லவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 01.04.2024 அன்று அ.சா.3 மூலம் எனக்கு தகவல் கிடைத்து நான் சம்பவ இடம் சென்றபோது மேற்படி ஆர்.கே.துரை தலை முழுவதும் நசுங்கி உடலில் பலத்த காயங்களுடன் சம்பவ இடத்தில் இறந்து காணப்பட்டதாகவும், 2ம் எதிரியை எட்டையபுரம் போலீசார் கைது செய்தததை நான் தெரிந்து கொண்டதாகவும், ஆர்.கே.துரை பண விசயத்தில் கஞ்சத்தனமாக இருந்ததாகவும், ஆர்.கே.துரையின் அனைத்து வரவு செலவுகளும் 2ம் எதிரிக்குத்தான் தெரியும் என்றும், மேற்படி ஆர்.கே.துரை அப்பனேரி அருகில் 7 ஏக்கர் நிலத்தை விற்று அதில் கிடைத்த ரூபாய் 2 கோடி பணத்தை 2ம் எதிரியிடம் கொடுத்ததாகவும், அது எனக்கு தெரியும் என்றும், மேற்படி ஆர்.கே.துரை இறந்துபோன நான்கு நாட்களுக்கு முன்பாக இதுகுறித்து ஆர்.கே.துரை என்னிடம் 2ம் எதிரி குறித்த எல்லா விசயங்களையும் மறைத்துவிட்டதாகவும், அதுகுறித்து பிரச்சனை ஏற்பட்டு அதன்காரணமாக ஆர்.கே.துரையை 2ம் எதிரி கொலை செய்ய சொல்லியிருக்கலாம் என்று எனக்கு தெரியவந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது 2ம் எதிரி எனக்கு நல்ல பழக்கம் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கேள்விப்பட்டவை. மே,ற்படி ஆர்.கே.துரை அவரது மருமகனான 2ம் எதிரியிடமிருந்து நிலம் விற்று ரூபாய் 2 கோடி ஆர்.கே.துரை வாங்கியதாக நான் போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் எனக்கு தெரியாது.

2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.25 18:56:29 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024

Prosecution witness for P.W.8.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மதுசூதனன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2025.

A2 present. A1 and 3 produced.

முதல் விசாரணை

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து நான் கார் விற்பனை கன்சல்டென்சி வைத்துள்ளேன். 01.04.2024 அன்று எட்டையபுரம் – கோவில்பட்டி சாலையில் சிகேடி பள்ளி அருகில் நான் எட்டையபுரத்திலிருந்து கோவில்பட்டி நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தபோது நானும், ஒரு குமார் என்பவரும் உடனிருந்து அந்த பார்வை மகஜரில் கையொப்பமிட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 7**. சம்பவ இடத்தில் அடிபட்டு கிடந்த இருசக்கர வாகனம், வாகனத்தின் உடைந்த பாகங்கள் ஆகியவற்றையும், ஒரு கைபேசியையும், இறந்துபோனவரின் ஆதார் அட்டையையும் போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 8**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு போகும்போது சுமார் 20 பேர் கூடியிருந்தார்கள். அவர்களிடம் போலீசார் கையொப்பம் கேட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் இறந்துபோன நபரின் உறவினர்.

ஆய்வாளர்தான் மகஜர்களை எழுதினார். ஆய்வாளருடன் இரண்டு போலீசார் இருந்தார்கள். மேற்படி போலீசார் மகஜர்களை எழுதவில்லை. போலீசார் என்னை காவல்நிலையம் வரச் சொல்லி விசாரிக்கவில்லை. நான் காவல்நிலையத்தில் வைத்துதான் மேற்படி கையொப்பங்களை போட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி மகஜர்கள் ஏற்கனவே நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டிருந்தது என்றும், என் முன்னிலையில் மகஜர்கள் தயாரிக்கப்படவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், சம்பவ இடத்தில் மகஜர்கள் தயாரிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபர் என் உறவினர் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.25 18:56:38 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024

Prosecution witness for P.W.9.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2025.

A2 present. A1 and 3 produced.

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலியில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன ஆர்.கே.துரை என் உடன் பிறந்த அண்ணன். 2ம் எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. 01.04.2024 அன்று மேற்படி ஆர்.கே.துரைக்கு விபத்து ஏற்பட்டது என்று 2 ம் எதிரி எனக்கு கைபேசி மூலம் தகவல் சொன்னார். நான் உடனே திருநெல்வேலியிலிருந்து எட்டையபுரத்திற்கு போனேன். எட்டையபுரம் மருத்துவமனை பிணவறைக்கு போனேன். அப்போது ஆர்.கே.துரையின் தலை முழுவதும் நசுங்கி இருந்தது. உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. நான் 2ம் எதிரியிடம் அதுகுறித்து கேட்டேன். அப்போது 2ம் எதிரி அவரது மாமனாருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார். அதுகுறித்து அ.சா.1 மூலமாக ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அதில் அறிவேன் சாட்சியாக 2ம் எதிரி கையொப்பமிட்டுள்ளார். பின்னிட்டு நான் ஆர்.கே.துரை வீட்டிற்கு சென்று விசாரித்தபோது ஆர்.கே.துரை 2ம் எதிரியிடம் ரூபாய் 3 கோடி அளவில் பணம் கொடுத்திருப்பதாகவும், அதற்காக ஆர்.கே.துரை அலைந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். மேற்படி தேதியில் 2ம் எதிரி மேற்படி ஆர்.கே.துரையிடம் ரூபாய் 15 லட்சம் ஒரு நபர் கொடுப்பதற்கு

எட்டையபுரத்தில் தயாராக இருப்பதாகவும், அதை வந்து வாங்கி கொள்ளும்படியும் தகவல் சொன்னதால் மேற்படி ஆர்.கே.துரை இருசக்கர வாகனத்தில் பணத்தை வாங்குவதற்காக போனதாகவும், திரும்பி வரும்போது விபத்து ஏற்பட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். மறுநாள் காலையில் பிரேத விசாரணை நடந்தபோது நான் உடனிருந்தேன். மறுநாள் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தையும், அதன் ஓட்டுநரையும் பிடித்துவிட்டதாக போலீசார் சொன்னார்கள். நான் காவல்நிலையம் சென்றேன். அப்போது காவல்நிலையத்தில் 1 முதல் 3 எதிரிகள் நிலையத்தில் இருந்தார்கள். நான் ஆர்.கே.துரை வீட்டில் விசாரித்தபோது அவர் ரூபாய் 3 கோடி வரையில் கொடுத்து வைத்திருந்ததை நோட்டு புத்தகத்தில் எழுதி வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். ஆர்.கே.துரை உடன் அ.சா.7 எப்போதும் ஒன்றாக இருப்பதாக ஆர்.கே.துரை வீட்டில் சொன்னார்கள். அ.சா.7–ஐ விசாரித்தபோது மேற்படி ஆர்.கே.துரை 2ம் எதிரியை நம்பி பணத்தை கொடுத்து மோசம் போய்விட்டதாக ஆர்.கே.துரை சொன்னதாக அ.சா.7 என்னிடம் சொன்னார். எட்டையபுரத்திற்கு மேற்கே சிகேடி பள்ளிக்கு மேற்கே சியாமள என்ற பெட்ரோல் பங்க் உள்ளது. அந்த பல்கில் 2ம் எதிரி உடன் மற்ற எதிரிகள் இருந்து கொண்டு மேற்படி ஆர்.கே.துரையை 2ம் எதிரி வரச் சொல்லும்போது 1ம் எதிரி லாரியை வைத்து இருசக்கர வாகனத்தில் மோதி கொன்றுவிடவேண்டுமென்று திட்டம் போட்டதாக சொன்னார்கள். அவர்கள் திட்டம்போட்ட கண்காணிப்பு கேமராவில் பதிவாகி கைபேசிக்கும் அனுப்பப்பட்டது. அதனால் விபத்து வழக்கை பின்னிட்டு கொலை வழக்காக மாற்றிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் கொடுத்த 01.04.2024 அன்றுதான் ஆய்வாளரை பார்த்தேன் என்றும், பின்னிட்டு ஆய்வாளரை நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். ஆய்வாளர் பெயர் தெரியும். அவர் பெயர் முருகன். அவருக்கு சொந்த ஊர் எங்கள் பூர்வீக ஊரான களப்பாளன் குளத்திற்கு அருகில் உள்ள பனைவடலி சத்திரம் என்றால் சரிதான். ஆய்வாளர் எனக்கு உறவினர்தான். ஆர்.கே.துரை இறப்பதற்கு முன்பாக அவருக்கும், எனக்கும் போக்குவரத்து உண்டு. திருமணம் முடிந்த பிறகு 2ம் எதிரி அவரது மனைவி பிள்ளைகளுடன் தனியாகவும், மேற்படி ஆர்.கே.துரை அவரது குடும்பத்தாருடன் தனியாகவும் இருந்தார்கள் என்றால் சரிதான். ஆர்.கே.துரை பார்த்து வந்த ரியல் எஸ்டேட் தொழில் தனி என்றும், 2ம் எதிரி பார்த்து வந்த ரியல் எஸ்டேட் தொழில் தனி என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்ன சங்கதிகள் நான் கேள்விப்பட்டவை. நேரில் தெரிந்த சங்கதிகள் அல்ல. 2ம் எதிரியின் குடும்பம் வசதியான குடும்பம் என்றும், அவர் தன் தகப்பனாரை சார்ந்து இருக்காமல் தனியாக தொழில் செய்து நல்ல நிலையில் இருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. யாரிடமும் கடன் வாங்கக்கூடிய அவசியமான நிலையில் 2ம் எதிரிக்கு இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி குடும்பம் திருக்குறங்குடியில் அரண்மனை குடும்பம் என்றால் சரிதான். அந்த குடும்பம் பரம்பரையான நில புலன்களோடு வாழும் குடும்பம் என்றால் தற்போது அவர்கள் நிலை சரியில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக ஆரம்பத்திலிருந்தே ஆய்வாளருடன் அ.சா.1–ம், நானும், தொடர்பில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். என்ன என்ன ஆவணங்கள் வேண்டும் என்பதை அ.சா.1தான் ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஆய்வாளர் இன்றைய வரையில் என்னையும், அ.சா.1–

ஐயும் தொடர்பு கொண்டு வழக்கு எந்த எந்த நிலையில் உள்ளது என்றும், எந்த எந்த சாட்சிகளை விசாரணை செய்துள்ளார் என்றும் தகவல் தெரிவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டதாக சொல்லும் சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றும், உண்மைக்கு புறம்பானது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆர்.கே.துரை தனது உறவினர்கள் வீட்டிற்கு நல்லது கெட்டது எதற்குமே செல்வதில்லை என்றால் சரியல்ல. ஆர்.கே.துரைக்கும், எனக்கும் இன்றுவரையில் பாகப்பிரிவினை ஆகவில்லை. பாகப்பிரிவினை ஆகாமல் இருப்பதற்கு 2ம் எதிரிதான் காரணம் என்ற எண்ணத்தில் நானும், அ.சா.1ம் 2ம் எதிரிமீது வன்மத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஆர்.கே.துரை இறந்தபிறகு அவரது குடும்பத்தில் இருந்த சொத்துக்களை நானும், அசா1ம் நிர்வகித்து வந்தோம் என்றால் சொத்துக்களை விற்று பணத்தை சமமாக பிரித்துக் கொடுத்தோம். ஆர்.கே.துரையின் மூலம் வரவேண்டிய வருமானங்களை நானும், அசா.1ம் கைப்பற்ற வேண்டுமென்றும், அதற்கு தடையாக இருந்த 2ம் எதிரி மீது பொய்யாக வழக்கு சூழலை ஏற்படுத்தி சாட்சியங்களை உருவாக்கி அவர்மீது பொய் வழக்கு புனைவதற்கு ஏதுவாக இருந்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும், அ.சா.1ம் சேர்ந்து கொண்டு ஆய்வாளருக்கு நாங்கள் தயார் செய்து கொடுத்த சாட்சியங்களை வற்புறுத்தி சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால்தான் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.25 18:56:52 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.